கூட்டம் எண்.006/2022

பேர்ணாம்பட்டு நகராட்சி
வேலூர் மாவட்டம்
நாள்.26.08.2022.

<u>சாதாரணக் கூட்டம்</u>

பேர்ணாம்பட்டு நகர் மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் தேதி செவ்வாய் காலை 11.00 மணியளவில் பேர்ணாம்பட்டு நகர் மன்றக் கூட்டத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் பின்வரும் பொருள்கள் குறித்து தீர்மானிக்கப்பட உள்ளதால் நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
வேலூர் மாவட்டம்

பெறுநர்
நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.

-----

பொருள் எண்.135

பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2022ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.500/2022/சி1

தீர்மானம் எண். 135

அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.136

பேர்ணாம்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2022ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.500/2022/சி1

தீர்மானம் எண். 136

அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.137

<u>நகரமன்ற தலைவர் திருமதி.பிரேமா அவர்கள் மற்றும் நகரமன்ற துணைத் தலைவர் திரு.ஆலியார் ஜூபேர் அஹ்மத் அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

18.08.2022ம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கனிம வளத்துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் மாண்புமிகு கே.எண்.நேரு அவர்கள், கதர் மற்றும் ஜவுளி துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்.காந்தி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு டி.எம்.கதிர் ஆனந் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.பி.நந்தகுமார் அவர்கள், கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர்கள்

கலந்து கொண்ட ஆய்வு கூட்டம் நடைப்பெற்றத்தில் நகரமன்ற தலைவரும் மற்றும் துணைத்தலைவர் அளித்த மனுவின் விவரம் கீழ்வாறு.

1. கடந்த 60 ஆண்டுக்கு முன்பு கட்டப்பட்ட காவல் நிலையம் பழுதடைந்துள்ளதால் அதை இடித்து காவல் நிலையம் எதிரில் உள்ள காவலர் குடியிருப்பு பகுதியில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டும். மேலும், காவல் நிலையத்தை தற்பொழுது இயங்கி வருகின்ற பேருந்து நிலையத்தில் சேர்த்து பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்து அதற்கு நிதி வழங்குமாறு கேட்டு கொள்ளப்பட்டது.
2. நகராட்சி பகுதியில் மக்கா குப்பை கொட்ட இடம் இல்லாததால் போர்கால அடிப்படையில் வருவாய் துறை மூலம் இடம் அளிக்கவும், உடனடியாக நகராட்சி மூலம் நிலம் கிரையம் வாங்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.
3. நகராட்சியில் கடநத் 10 வருடங்களாக பழுதடைந்த சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் 21 வார்களில் அதிகம் உள்ளதால் அதிகமான நிதி ஒதுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.
4. நகராட்சியில் குப்பை அள்ளவும் கழிவுநீர் கால்வாயில் மண் அள்ளவும் மினி ஜெ.சி.பி. வாங்க நிதி ஒதுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.
5. நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்த நிதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.
6. நகராட்சி பகுதியில் குடிநீர் பிரச்சனை உள்ளதால் கூடுதல் நிதி ஒதுக்கி 24 மணி நேரமும் குடிநீர் வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டது.
7. நகராட்சி பகுதிகளில் அனைத்து மின் கம்பங்களில் எல்.இ.டி. விளக்குகள் அமைக்க நிதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.
8. BOV வாகனங்கள் கூடுதலாக வாங்க நிதி ஒதுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

தீர்மானம் எண். 137

1, 2, 3, 4, 5, 6, 7, 8 ஆகிய பொருள்கள் வாசித்து பதிவு செய்யப்பட்டது. மேலும் இதன் விவரங்கள் அந்தந்த துறையிலிருந்து கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

பொருள் எண்.138

<u>1வது வார்டு உறுப்பினர் திரு. வை. அதீக்குர் ரஹ்மான் அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 1வது வார்டுக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான ச. எண்: 478/4 (ப)யில் உள்ள 700 ச.அ காலிஇடத்தில் சிறுவர் பூங்கா (அ) இளைஞர்களுக்கான உடற்பயிற்சிக்கூடம் (அ) நூலகம் அமைத்துத்தர கோருகிறார்.
2. ஆசாரி சலீம் பாய் வீடு உள்ள சுமார் 200 மீட்டர் நீளமுள்ள மண் சாலையில் கழிவு நீர் கால்வாய், சிமெண்டு சாலை அமைத்துத்தர கோருகிறார்.
3. சுபான் பாய் கடை உள்ள வீதியில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட சிமெண்டு சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதால் அந்த வீதி வழியாக செல்லும் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே பழுதடைந்துள்ள சிமெண்டு சாலையை அகற்றிவிட்டு புதியதாக சாலை அமைத்துத்தருமாறு கோருகிறார்.
4. பேர்ணாம்பட்டு தரைக்காடு நகராட்சி பொதுக்கழிப்பிடம் எதிரில் கழிவுநீர் கால்வாய் இல்லாததால் கழிவுநீரும், மழைக்காலங்களில் மலைப்பகுதியிலிருந்து வரும் மழைநீரும் சாலைக்கு நடுவே ஓடிக்கொண்டிருக்கிறது இதனால் அந்த சாலையை பயன்படுத்தும் பாதசாரிகள் மிகவும் சிரமத்திர்க்குள்ளாகிறார்கள். எனவே சுமார் 40 மீட்டர் நீளத்திற்கு கழிவு கால்வாயும், கல்வெட்டும் அமைத்துத்தருமாறு கோருகிறார்.
5. குப்பைமேடு, தரைக்காடு குடியிருப்பு பகுதிகளின் வழியாக செல்லும் உயரழுத்த மின் கம்பி (HT LINE) பொதுமக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இதனால் கடந்த காலங்களில் அந்த பகுதியில் உயிர் சேதமும் ஏற்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு குப்பைமேடு, தரைக்காடு வழியாக செல்லும் உயரழுத்த மின் கம்பி (HT LINE) உடனடியாக குடியிருப்பு பகுதியிலிருந்து அப்புறப்படுத்தி பொதுமக்கள் வாழாத காலி இடங்களின் வழியாக அல்லது பொதுமக்களின்

குடியிருப்புகள் இல்லாத சாலைகளின் வழியாக எடுத்துச் செல்ல மின்சார வாரியத்திற்கு இந்த நகர மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி கோரிக்கை வைத்திட கோருகிறார்.

6. 1வது வார்டுக்கு உட்பட்ட தரைக்காடு கொய்யா தோப்பு பகுதியில் உள்ள ஹாண்ட் குளோஸ் வியாபாரி நூருல்லாஹ் பாய் வீடு உள்ள சுமார் 100 மீட்டர் மண் சாலையில் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவு நீர் கால்வாய் அமைத்துத்தருமாறு கோருகிறார்.
7. 1வது வார்டுக்கு உட்பட்ட தரைக்காடு கொய்யா தோப்பு பகுதியில் உள்ள மரக்கட்டை வியாபாரி அஷ்ரப் ஹஸ்ரத் வீடு உள்ள சுமார் 100 மீட்டர் மண் சாலையில் பேவர் பிளாக் சாலை மற்றும் கழிவு நீர் கால்வாய் அமைத்துத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் எண். 138

1–அரசு வளர்ச்சி நிவாரண நிதியில் பணியில் மேற்கொள்ளலாம்.

2, 3, 4, 6, 7– பொறியாளர் அறிவிக்கை வைக்கவும்.

5–மின் வாரியத்திற்கு கடிதம் அனுப்ப வேண்டும்.

பொருள் எண்.139

<u>2வது வார்டு உறுப்பினர் திருமதி.பி.ஜானகி அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 2வது வார்டு ஜெ.ஜெ.நகர், புது ஷாப் லைன், பாத்திமா நகர் ஆகிய தெருகளில் புதிய சிமெண்ட் சாலை மற்றும் கழிவு நீர் கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
2. ஜெ.ஜெ.நகரில் உள்ள பொது கழிப்பறை, பாத்திமா நகர் போன்ற இடங்களில் பழுதடைந்துள்ள சின்டெக்ஸ் டேங்கினை மாற்றி தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண். 139

1, 2 வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.140

<u>5வது வார்டு உறுப்பினர் திரு.சி.அப்துல்ஹமீத் அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 5வது வார்டு புது வீதி–1,2 ஆகிய வீதிகளில் கடந்த 25 வருடமாக 3 இன்ச் பைப்லைன் இருந்து வருகிறது. அந்த பைப்லைன் பழுதடைந்துள்ளதால் புதியதாக 4 இன்ச் பைப்லைன் அமைத்து தருமாறு கோருகிறார்.
2. 5வது வார்டு புது வீதி–1ல் பொது குழாய் இல்லாததால் ரஹமானியா வீதி வலைவிலிருந்து பைப்லைன் அமைத்து பொது குழாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
3. பேர்ணாம்பட்டு நகராட்சிக்கு 1996 முதல் 2022 வரை நகராட்சிக்கு ஒதுக்கப்படட பொது இடங்கள் எத்தனை உள்ளது, எந்தெந்த சர்வே எண்களில் உள்ளது என்பதனை கண்டுபிடித்து அதனை மறு நகரமன்ற பார்வைக்கு வைக்க வேண்டும். மேற்படி பொது இடங்களை எவரேனும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்காள என அதன் முழு விவரம் மன்ற பார்வைக்கு வைக்க வேண்டும் என கோருகிறார்.
4. நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டு, அதனை அரசு சட்ட விதிமுறைகளுக்கு கடைபிடிக்கப்படாமல் மனைகள் அமைத்து வருவதால் சென்ட் கணக்கில் மனைகள் அமைத்து அதனை பத்திரப்பதிவு செய்யப்பட்டால் அதனை தடுக்கும் வகையில் சார் பதிவாளர் அலவலகத்திற்கு கடிதம் அனுப்பி நிறுத்த வேண்டியும், நகராட்சிக்கு ஒதுக்க வேண்டிய பொது இடமும், நகராட்சிக்கு செலுத்த அபிவிரித்தி கட்டணம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோருகிறார்.

தீர்மானம் எண். 140

1, 2– பொறியாளர் ஆய்வு செய்து அறிவிக்கையின் பேரில் வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளலாம்.

3, 4– கட்டிட ஆய்வாளர் ஆய்வு செய்து அறிவிக்கை வைக்கவும்.

பொருள் எண்.141

<u>7வது வார்டு உறுப்பினர் திருமதி.அபுல் அசன் ஷாகிரா பேகம் அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 7வது வார்டில் மழை காலங்களில் மழைநீர் தாழ்வான பகுதிகளில் வீட்டிற்க்குள் புகுவதால் மலாட்டாற்றில் தடுப்பு சுவர் கட்டி தருமாறு கோருகிறார்.
2. 7வது வார்டில் உள்ள தெருகள் தாழ்வான பகுதியில் குடிநீர் வீணாவதை தடுக்க கேட்வால்வு அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண். 141

1-பொதுப்பணி துறைக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

2-அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.142

<u>11வது வார்டு உறுப்பினர் திரு.டி.அப்துல்ஜமில் அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

11வது வார்டு ரஹ்மதாபாத் வீதி-4ல் புதியதாக கல்வெட்டு அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண். 142

அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.143

<u>16வது வார்டு உறுப்பினர் திருமதி.ம.பாரதி அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

16வது வார்டு சஞ்சிவி வீதி மற்றும் புண்ணாக்கி வீதி ஆகிய தெருகளில் ஒருபுறம் மட்டுமே கழிவு நீர் கால்வாய் உள்ளதால் மழைக்காலங்களில் கழிவுநீர் கால்வாய் நீர் வீட்டினுள் புகுந்துவிடுவதால், புதியதாக இன்னொரு புறமும் கழிவு கால்வாய் கட்டி தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண். 143

அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.144

<u>18-வது வார்டு உறுப்பினர் திருமதி.கே.தேன்மொழி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. சாலப்பேட்டையில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் தேக்கத் தொட்டி (விஜயலட்சுமி மண்டபம் எதிரில்) ஒரு இலட்சம் கொள்ளளவு கொண்ட டேங்க் அமைத்து தருமாறு கோருகிறார்.
2. சவுக்ரோடு-2ல் ஜான்பீட்டர் ஆசிரியர் தெருவில் மண் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றி அமைக்கும்படி கோருகிறார்.
3. சாலப்பேட்டை-4, சாலப்பேட்டை-2வது தெருவில் புதியதாக அமைந்துள்ள மனை பிரிவு-3, சவுக்ரோடு-10, மற்றும் சவுக்ரோடு-13ல் சிமெண்ட் சாலை மற்றும் கால்வாய் அமைத்து தரும்படி கோருகிறார்.
4. சாலப்பேட்டை கெங்கையம்மன் கோயில் பின்புறம் பெரிய கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
5. ஏரிக்கரைக்கு கீழ் உள்ள மனைப்பிரிவில் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.
6. சாலப்பேட்டை கெங்கையம்மன் கோயில் அருகே மற்றும் அம்பேத்கார் சிலை அருகே ஹைமாஸ் லைட் அமைத்து தருமாறு கோருகிறார்.
7. பேரூராட்சி முன்னாள் பணியாளர் மணி வீட்டு அருகே கால்வாய் பாலம் அமைத்து தருமாறு கோருகிறார்.
8. சவுக்ரோடு-3ல் பால்வாடி மையம் அருகே மற்றும் சவுக்ரோடு-2ல் சதாசிவம் வீட்டின் அருகே கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
9. நகராட்சிக்கு சொந்மான விஜயலட்சுமி மண்டபம் எதிரில் சிறுவர் பூங்கா அமைத்து தருமாறு கோருகிறார்.
10. சவுக்ரோடு-2ல் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண். 144

1, 2, 3, 4, 5, 6, 7, 8 , 9, 10 ஆகிய பணிகள் குறித்து விரிவான அறிவிக்கை பொறியாளர் வைத்து வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.145

<u>19வது வார்டு உறுப்பினர் திரு.ஆர்.கோவிந்தராஜ் அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 19வது வார்டுஆயக்கார வீதியில் அமைந்துள்ள பாதாள சாக்கடை சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு அதன் மேற்பகுதி பாறைகளால் மூடப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடமாக இந்த பாறைகள் வாகனங்கள் செல்லும் போது உடைந்து விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. விபத்துகள் நிகழா வண்ணம் பாதாள சாக்கடை மேற்கூரையினை எடுத்து சிமெண்ட் கான்க்ரிட் சிலாப் அமைத்து தருமாறு கோருகிறார்.
2. ஆயக்கார வீதியில் ஆதிமுலம் கடை எதிரில் உள்ள கழிவுநீர் கால்வாய் பழுதடைந்துள்ளதை சரிசெய்து தருமாறு கோருகிறார்.
3. பாகர் உசேன் வீதி–1ல் தட்டுகார் தெருவில் இருபுறமும் கழிவுநீர் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.
4. பாகர் உசேன் வீதி–1ல் முருகன் கோயில் எதிரே உள்ள தெருவில் கழிவுநீர் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.
5. பூந்தேராட்ட வீதியில் உள்ள 4 சந்துகளுக்கு கழிவுநீர் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.
6. ஆயக்கார வீதி , முருகன் கோவில் வீதி ஆகிய வீதிகளில் உள்ள குடிநீர் பைப்லைன்களை 4 இன்ச் பைப்லைனாக மாற்றி தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண். 145

1 முதல் 6 ஆகிய பொருள் குறித்து விரிவான அறிவிக்கை பொறியாளர் தயார் செய்து வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.146

<u>20வது வார்டு உறுப்பினர் திருமதி.இந்திராகாந்தி அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. பேர்ணாம்பட்டு நகாட்சிக்குட்பட்ட பொதுவான மைய பகுதியில் தனது இறுதி மூச்சு வரை உழைத்த பேரறிஞர் அண்ணா மற்றும் நவீன தமிழகத்தின் சிற்பி தலைவர் கலைஞர் அவர்களின் சிலைகளை அமைத்து தருமாறு கோருகிறார்.
2. 20வது வார்டு ஒங்குப்பம் ரோடு சுமார் 4.50 ஏக்கரில் ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் பள்ளி கட்டிடம் அமைக்கப்பட்டு இன்று சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி உள்ளதாலும், மிகவும் பயனற்ற நிலையில் உள்ள இடத்தை சீர் செய்து ஒரு தொழில்நுட்ப கல்லூரி அமைக்கவும் அல்லது அரசாங்க பணிகளின் பயன்பாட்டிற்காகவும் அமைந்திடமாறு கோருகிறார்.

தீர்மானம் எண். 146

1, 2 அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.147

<u>21–வது வார்டு உறுப்பினர் திருமதி.வி.நஜிஹா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. ரஷிதாபாத் 4வது வீதி மற்றும் 4வது வீதி ஜாகிர் மசுதி அருகில் 3 வீதிகளுக்கு சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.
2. அருந்ததி வீதியில் 3 மின்கம்பங்கள், ஷேக்மீரான் வீதியில் 1 மின்கம்பம், எச்.ஏ.கே.வீதியில் 1 மின்கம்பம், சித்திக் நகரில் 1 மின்கம்பம், ரஷிதாபாத் புதுமனையில் 2 மின்கம்பங்கள் அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண். 147

1–வளர்ச்சி நிவாரண நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளலாம்.

2– தமிழுழநாடு மின்சார வாரியம் மூலம் மின்கம்பம் அமைக்க அனுமதிக்கப்படுகிறது.

பொருள் எண்.148

பேர்ணாம்பட்டு நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி.யில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய 1/ Kit Seal – 1 No/ Hydralic Oil – 40 Liters பொருட்கள் வாங்க வேண்டி உள்ளதால் பணியினை அவசரஅவசியம் கருதி ஜே.சி.பி ஆத்தரை1 டீலர் "TRR Automotive" என்ற நிறுவனத்தில் பெறப்பட்ட விலை புள்ளியின்படி ரூ.17448/– நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 731/2022/இ1

தீர்மானம் எண். 148

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்./–) வெ.பிரேமா,
நகர்மன்ற தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி